1971 ஜூலை 29]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே சில்ட்ரன் தியேட்டர் இருந்து வருகிறது. அதைப் புதுப்பிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது. 15, 20 லட்சம் ரூபாய் வரை செலவுசெய்து புதுப்பித்து ஏர் கண்டிஷன் செய்யும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, will the Government contemplate to construct Ministers' residences in the Government Estate?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படி ஒரு எண்ணம் இல்லை. அமைச்சர்களுக்கு இப்போது இருக்கும் வீடுகளே போதுமானவை.

திரு. கே. என். குமாரசாமி: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் இருக்கும் எம்.எல்.ஏ. ஹாஸ்டல் சில இடங்களில் சுவர்கள் வெடிப்பு ஏற்பட்டு அபாய நிலையில் இருக்கிறது. விழுகின்ற நிலையில் இருக்கும் அதைப்பாதுகாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விழுகின்ற நிலையில் இருப்பதாக எந்தவிதமான புகாரும் கிடையாது. இதுபோன்ற பீதியான கேள்விகளைக் கேட்பதன்மூலம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பீதியைக் கிளப்ப வேண்டாம். மூலக் கேள்வி கடைநிலை ஊழியர்களுக்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றியாகும்.

திரு. நா. வீராசாமி: கவர்ன்மெண்ட் எஸ்டேட்டுக்குள் ஹாஸ்டல் இருக்கிறது. சபாநாயகர் இல்லம் (கூவம் ஹவுஸ்) இருக்கிறது. ஹாஸ்டலுக்குத் தொடர்புடைய துணைச் சபாநாயகருக்கு அங்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைச் சபாநாயகர்மீது காட்டுகின்ற அனுதாபத்திற்காகப் பாராட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவிப் பொறியாளர் முதலானோருக்குக் குடியிருப்புகள்

* 484 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொதுப்பணித்துறையில் பணியாற்றும் உதவிப் பொறியாளர், மேற்பார்வையாளர், நீர்ப்பாசன குமாஸ்தா, நீர்க் காவலர்கள் ஆகியோர்களுக்கு அரசே குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): பொதுப்பணித்துறையின் மேற்பார்வையாளர்களுக்கும், உதவிப் பொறியாளர்களுக்கும், குடியிருப்பு வழங்குவதில் ஒரு திட்டவட்டமான ஏற்பாடு இதுவரையில் பின்பற்றியதில்லை. அவசியமான

போது தனிப்பட்ட செயற்குறிப்புகள் அங்கீகரிக்கப்பட்டன. பழைய அணைக்கட்டு முறைகளுக்கும் திட்டங்களுக்கும் சார்ந்த நீர்ப்பாசன எழுத்தாளர்களுக்கும், காவலாளர்களுக்கும் குடியிருப்புகள் ஏற்கனவே தரப்பட்டன. புதிய அணைக்கட்டுத் திட்டங்களில் வழங்குவதற்காகப் பொருள்களை வைக்கக் கட்டப்படும் கட்டடங்கள் பின்னர் மேற்படி பணியாளர்களுக்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டுக் குடியிருப்புக்குக் கொடுக்கப்படுகிறது.

பொதுப்பணித்துறை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி படிப் படியாகச் செய்ய ஒரு திட்டம் வகுக்க அரசு சிந்தித்து வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, will the Government think of sanctioning at least loans to the Assistant Engineers and others leniently and quickly for housing purposes?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே அரசு அவர்களுக்குக் வீடு கட்டக் கடன் கொடுத்து வருகிறது. அவர்கள் விண்ணப்பங்களைக் குறித்த காலத்தில் அனுப்பி நிதிவசதிகள் இருக்குமானால் பணம் தரப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : திருநெல்வேலியிலுள்ள சுற்றுலா மாளிகையிலுள்ள காவலர்களுக்கு வீடுகள் இல்லை. அங்கே போதுமான இடம் இருக்கிறது. அந்தக் காவலர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும். அதுபோன்ற பிரச்சினை இருந்து வருகிறது.

National Development Council Meeting

* 523 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether during N.D.C. meeting at New Delhi on 26th September 1969, the Tamil Nadu Government sought two powers for the State, namely, the power for approval of Industrial licences and distribution of Foreign Exchange;

(*b*) whether the N.D.C. agreed to this request of Tamil Nadu Government; and

(*c*) whether the State Government has worked out any plan for the mode of implementing these two proposals?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தொழிலில் பின் தங்கிய பகுதிகளைத் தெரிந்தெடுப்பதற்காகத் தேசிய வளர்ச்சி மன்றத்தின் கூட்டம் கூட்டப்பட்டது. கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அரசுச் சார்பில் பேசுகையில் உரிம அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்றும் அந்நியச் செலவாணிக்கு அனுமதி அளிக்கும் அதிகாரங்கள் மாநில அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் பிறவற்றிற்கிடையே வலியுறுத்தினர். தேசிய வளர்ச்சி மன்றம் 26—9—1969 அன்று நடத்திய கூட்டத்தில் இச் செயற்குறிப்புகள் ஆலோசிக்கப்படவில்லை.